
லயன்
காமிக்ஸ்
ரூ. 2/
இஸ்தான்புல் நாடகம்!
முழுநீளச்
சித்திரக் கதை!

# துப்பறியும் வீரர் ஜேஸன் தோன்றும் இஸ்தான்புல் நாடகம்!




எஜெக்டர் அமைப்பை இயக்கி இர்வின் முதலில் வானில் எகிறித் தாவ, அவனைப் பின்பற்றி தானும் வெளியேறினான் ஜேஸன்.


பாராசூட் வீரர்களை பயங்காட்டிவரும் அந்த எதிர்பாராத ஆபத்து அன்று ஜேஸனிற்கு சோதனையாய் அமைந்தது. பாராசூட் விரிக்கப்படாத நிலையில் பூமியை நோக்கி அவனது கிடு கிடு பயணம் துவங்கியது !


ஒரு சில விநாடிகள் உற்சாக உணர்வு தலை தூக்கியது. ஆனால் மறுகணம் இதுவே தன் மரண யாத்திரை என்பது புரியவே...!
அஹ்!


நண்பனின் பரிதாப நிலையைக் கண்ட இர்வின் தன் பாரா சூட்டில் காற்றினைக் குறைத்து வேகமாய் அவனை நோக்கித் தாவி கைகளால் வளைக்க முயன்றான்...
பிடித்துவிட்டேன்! என் பாராசூட்டினைப் பற்றிக்கொள் ஜேஸன்!


இருவரின் அதிகப்படியான எடையால் வேகமாய் பூமியை எட்டியது பாராசூட்.
தரை இறங்கப் போகிறோம்!
சமயத்தில் இர்வின் மட்டும் உதவியிராவிட்டால் நான் இப்போது தரையில் பிணமாய் கிடப்பேன்! இர்வினுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருப்பேன்!
தரையில் பெரும் மோதலுடன் வந்திறங்கினர் இருவரும். கணுக்கால் சுளுக்கிக்கொண்டது.
வா, கிளம்புவோம். எதிரிகள் வரக்கூடும்!
நீ போ, இர்வின்! முறிந்த இந்தக் காலோடு ஒரு அடி கூட நடக்க முடியாது.
உன்னை விட்டுச் செல்வதா — ஊஹூம் மாட்டேன்! வா, அதோ அந்த மறைவிடத்தில் பதுங்கிக் கொள்வோம். இருட்டியதும் தப்பிச் செல்லலாம்!


பள்ளத்திற்குள் சென்று தங்களை முழுவதுமாக மறைத்துக் கொள்ளும் முன்பே சரசரக்கும் காலடியோசை அவர்கள் காதுகளை வந்து எட்டியது.
குனிந்துகொள், ஜேஸன்! நம்மைத்தான் தேடுகிறார்கள்!
ஜேஸனும், இர்வினும் தங்கள் கைத்துப்பாக்கிகளை உருவினர் ..
நிச்சயம் நம்மைக் கவனித்து விடுவார்கள்! ஆனால் அருகே நெருங்கும் வரை சுடவேண்டாம், இர்வின்!


வடகொரிய வீரர்கள் இலக்கு எல்லைக்குள்
வந்ததும் தம் தானியங்கித் துப்பாக்கிகளை
இடைவிடாது இயக்கினர் இருவரும்...


அதேசமயம், எதிரிகளின் எல்லைப்பகுதிக் கண்காணிப்
பில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகாப்டர்
ஒன்று வெடியோசையைக் கேட்டது!
ஹே, ஹாரி . கீழே ஏதோ அசம்பா
விதம். இரண்டுபேர் ஆபத்தில்
சிக்கியிருப்பதுபோல் தெரிகிறது,
சற்று நெருங்கிச் சென்று
பார்ப்போம்!


மறைவில் இருந்த அந்த இரு பிரிட்டிஷ் வீரர்களினருகே தரையைத் தொட்ட ஹெலிகாப்டரிலிருந்து எந்திரத் துப்பாக்கி 'பட பட' வெனப் பொரிந்தது.
பட!
எதிரிகளை எந்திரத்துப்பாக்கி வீழ்த்திக்கொண்டிருக்க, ஜேஸனைத் தாங்கலாய் ஹெலிகாப்டரினுள் ஏற்றினர் அந்த அமெரிக்கர்கள்- அடுத்த இரண்டாவது நிமிடம் அங்கிருந்து கிளம்பினர் ..
நன்றி, நண்பர்களே! சமயத்தில் வந்து எங்களைக் காப்பாற்றினீர்கள்!
ஆ ஆ, விட்டுத் தள்ளு!


அந்தச் சம்பவத்திற்குப்பின் ஜேஸன் இர்வின் இருவருக்
கிடையேயான நட்பு மேலும் வலுப்பட்டது. நண்பர்கள்
ஓய்வு பெற்று ஒன்ருக டோக்கியோ வந்தனர்...
இதுதான் உண்மையில் சுகபோகமான வாழ்க்கை — இல்லையா, ஜேஸன்



ஆனல் இர்வினின் அந்த விடுமுறைக்கால நடவடிக்கைகள்
தோழனை மிகவும் வருத்தமுறச் செய்தன...
இர்வின் பெண் சபலம் கொண்டவனயிருக்கிருன்.


அவன ஒரு பிறவி சூதாட்டக் காரனும்கூட...
நிறைய தோற்கிறான்! அப்படியும் நிறுத்த மனமில்லையே.. ஏன்?
ஆட்டத்தில் நிறைய தோற்று விட்டாயே?
போனால் போகுது! இதைப்போய் பெரிதுபண்ணாதே!
கொரிய யுத்தம் முடிந்ததும் விமானப் படையிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்டான் இர்வின்.
அடுத்த வாரத்தில் இந்த ராணுவச் சீருடைக்கு 'டாடா' காட்டிவிடுவேன், அப்புறம் உளவுத்துறை ஒன்றில் சேரப்போகிறேன்.
ஜேம்ஸ்பாண்ட் வேலைகள் செய்யப்போகிறாயா-என்ன? எதுவாகயிருந்தாலும் குட்லக்!


ஜேஸன் ராணுவத்திலிருந்து வெளிவந்ததும் தனிப்பட்ட முறையில், விமானம் ஓட்டுதல் மட்டும் பாராசூட் பயிற்சிக்கென பள்ளி ஒன்றினைத் துவக்கினான்...
ஸார், நான் விமானத்திலிருந்து குதித்ததும் பாராசூட் கயிற்றை இழுத்து அது விரியவில்லை என்றால்?
எங்களிடம் திருப்பக் கொடுத்து விடலாம். பதிலுக்குப் புதிதாய்த் தருவோம் அதற்குப் பணம் தர வேண்டியதில்லை. என்ன, சரிதானா?


பாராசூட் குடையுடன் குதிக்கும் கலையில் ஒரு தேர்ந்த வல்லுநன் ஆனான் ஜேஸன். அவனது கொரிய அனுபவமே அதற்கு ஒரு தூண்டுகோலாயிருந்தது.
இறக்கையில்லாமல் பறப்பது போன்ற உல்லாச உணர்வு எழுகிறது!


நாடு முழுக்கச் சென்று தனது ஆற்றலை வெளிப்படுத்தி மக்களை அதிசயிக்க வைத்தான்.
அற்புதம்!
பயங்கரமான வித்தை இது!
இந்த மயிர்கூச்செறியும் காட்சியைக் கண்கொண்டு பார்க்க தைரியமில்லை எனக்கு!
படுவேகமாய் பூமிநோக்கி வந்து கடைசி விநாடியில் பாராசூட்டினை விரிக்கச் செய்து, சாக்பீஸ் அடையாளமிட்ட சிறுவட்டத்தினுள் கச்சிதமாக இறங்கி ஒவ்வொரு முறையும் பார்ப்போரை பிரமிக்க வைத்தான் ஜேஸன்.
மீண்டும் செய்து காட்டி விட்டான். ஒரு தடவைகூட இவன் தவறி நான் பார்க்கவில்லை.


இதற்கிடையே ஆண்டுகள் சில கடக்கஜேஸன் இர்வின்
இருவருக்கிடையே தொடர்பு இல்லாமலே போய்விட்டது.
ஹலோ, ஜேஸன்! பார்த்துஎவ்வளவு காலமாயிற்று!
ஓ இர்வின்! நீ எப்படி இங்கே?
இன்று நீ என்னோடு விருந்து சாப்பிடுகிறாய்! உனக்குப் பிடித்தமான சங்கதி ஒன்று சொல்லப் போகிறேன்!
ஓ கே!
உளவு ஸ்தாபனத்திற்கு ஒத்தா-சை செயய உனக்கு விருப்ப மிருக்கிறதா? அதற்கு உன் பிரத் யேகத் திறமைகளைக்கொண்டி ருக்கும் ஒரு நபர் எங்களுக்குத்தேவை.
என் திறமையைத் தேவையாகக் கொண்ட வேலை என்னவோ?


லண்டனுக்கு வந்தால் விசே-டப்பிரிவின் தலைமை மேலதிகாரி கோயல், M. I. 5 பிரிவைச்சேர்ந்த ஹைடன் இருவரையும் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்.


ஜேஸன் மூன்று தினங்க-ளுக்குப்பின் ஸ்காட்லாந்து யார்டு உளவு நிறுவனத் திற்கு நண்பனுடன் புறப்பட்டான்.
ரெஜல்டு, நான் ஐந்துமணிவரை மாநாட்டில் இருப்பேன் என்ற விபரத்தை இன்ஸ்பெக்டர் மாஸனிடம் கூறிவிடு.
இதோ வருகிறார், தலைமை மேலதிகாரி கோயல்.
ஆகட்டும், ஸார்.
15


கோயல் டாக்ஸி ஒன்றை அழைத்தார்.
என் உத்தியோகத்தைப் பொறுத்தவரை அலுவலகக்காரை உபயோகப்படுத்தாதிருப்பதே உசிதம். என் நடவடிக்கைகள் கண்காணிப்படுவதை தவிர்க்க இது தான் வழி!


கர்ஸோன் வீதியில் அமைந்த வீடு ஒன்றினையடைந்தனர் மூவரும். அங்கே ராணுவத்தோரணை கொண்ட நரைத்த தலைமுடிக்காரர் ஒருவர் அவர்களுக்காகக் காத்திருந்தார்.
இவர்தான் கர்னல் ஹைடன்.


ஜேஸன், உங்கள் பாராசூட் வித்தையே எங்களுக்கு ஈடுபாட்டை உண்டாக்கிய அம்சம். விமானத்திலிருந்து குதிக்க ஒரு நபர் தேவை!
ரஷ்ய உளவு ஸ்தாபனத்தின் சில ரகசிய தஸ்தாவேஜுகளைப் படம்பிடிக்க இர்வினுக்கும் நீ வழி ஏற்படுத்தித்தர வேண்டும்.
உன் ஒத்துழைப்புக் கிடைப்பதைப்பொறுத்தே நான் மேற்கொண்டு தகவல்களை கூற முடியும். இதில் எந்தவித கட்டாயமோ தூண்டுதலோ கிடையாது.


ஜேஸனிற்கு அற்புதமான பணி என்று தோன்றியது. அத்துடன் இர்வினும் இதில் தன்னைச்சார்ந்திருக் கிறான் என்பது புரிந்தது.
அனைவரது முகமும் மலர்ந்தது. ஹைடன் உடனே மேற்-கொண்டு விவரிக்கலானார்...
ஆல்ரைட்... எனக்கு இதில் சம்மதம்!
நான் குறிப்பிட்ட வெளிநாடு துருக்கி கட்டிடம் இஸ்தான் புல்லில் இருக்கிறது. இர்வினை யும் அவனது சகாக்களையும் உள்ளே இட்டுச் செல்வதோடு உன் பணி முடிந்து விடுகிறது.
உள்ளே நுழைவது சரி ஆனால் அங்கி ருந்து தப்பிவருவது எப்படி?
முடிந்தவரை பிறர் கண்ணில் படக்கூடாது. வழியில்லையோ, புகைக்குண்டுகளைப் பயன்படுத்துங்கள்.
அந்தவேலையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், ஜேஸன்
18


இரண்டு தினங்களுக்குப்பின் ஜேஸன் கர்ஸோன் தெரு இல்லத்திற்குச் சென்றான். அங்கே இர்வின் தன் சகாக்களான டிரேக், ஜார்ஜ் இருவரையும் அறிமுகப்படுத்தினான்.
பெட்டகங்களையும் தஸ்தாவேஜு அறைப் பூட்டுக்களையும் உடைப்பதில் ஜார்ஜ் ஒரு நிபுணன். டிரேக் தன் உடல் பலத்தால் நமக்கு உதவுபவன்.


இர்வினிடம் இஸ்தான்புல் நகர வரைபடமும் குறிப்பிட்ட கட்டிடத்தின் அமைப்பைக்காட்டும் வரைபடமும் இருந்தன.
...கட்டிடம் தனித்து அமைந்துள்ளது. மொட்டைமாடி... அதில் காற்றுப் போக்கிக்குழாய் உண்டு. நீ அதனுள் புகுந்து அடுத்த கீழ்மாடிக்கு கம்பித் தடுப்பைத் தகர்த்து இறங்க வேண்டும்.


இத்தனை விபரங்களும் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?
நம் இடத்திற்கு புகலிடம் நாடி வந்த ரஷ்யன் ஒருவன் தந்த தகவல் இது. நிச்சயமாக இதனை நம்பலாம். ஆனால் அவனை நம் உளவுப்பணிக்குப் பயன்படுத்துதல் சாத்தியமில்லை!


மறுவாரம் நால்வரும் இஸ்தான்புல் பயணமாயினர்.
இத்தகைய விநோதமான பணியினை நான் ஏற்பது இதுவே முதல்தடவை, இர்வின்.
இருக்கலாம் .. ஆனால் இதில் வெற்றிபெறப் போவது நிச்சயம்! ரஷ்யர்கள் நாம் செய்யப்போகும் காரியத்தை சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!


நதிக்கரையோர ஹோட்டல் ஒன்றினில் தங்கினர்...
கட்டிடத்தின் மேலே தாழ்வாய்ப் பறந்து செல்வோம் நீ சூழ்நிலையை மதிப்பீடு செய்துகொள்ள ஏதுவாயிருக்கும்..


நகருக்கு அப்பால் அமைந்த தனியார் விமானதளம் ஒன்றிற்குச் சென்றனர். அங்கே துருக்கிய விமானி ஒருவன் இவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான்...
இவன் பெயர் ஹாசன் இந்தத் தொழிலில் இருக்கும் மிகச்சிறந்த பைலட்டுகளின் ஒருவன். இஸ்தான்புல்லில் இவனறியாத வீடோ, வீதியோ கிடையாது.


நதியினை ஒட்டிய குன்றின் விளிம்பில் அமைந்த கட்டிடம்
பார்வைக்குத் துல்லியமாய் தனித்துக் காணப்பட்டது.
அதோ அந்த மாடிக் கட்டிடம்!
பார்த்துக் கொண்டேன். மேற்கூரை இறங்கு-வதற்கு சவுகரியமாக அமைந்துள்ளது
எதிர்பார்த்த இரவுவேளை வந்தது! வானில் நிலவு தோன்று-
வதற்கு சற்றுமுன் ஜேஸன் விமானதளத்தின் இருண்ட
மூலையில் பாராசூட்டினை அணிந்து புறப்பட ஆயத்தமா-
னான். கழுத்தில் வாயுக்கவசம் ஒன்றையும் இடுப்பில்
நைலான் கயிற்றுஏணியையும்
கட்டிக்கொண்டான்.
ஓ கே! தடுநிசி கடந்த பத்தாவது நிமிடம் நான்மேலி ருந்து கீழே குதிக்க வேண்டுமென்பது தான் ஏற்பாடு. அதே சமயம் மற்றவர்கள் தத்தம் இடத்தில் தயாராய்க் காத்திருப்பார்கள்.
நிலவு வந்தபின் கிளம்புவோம்! ரைட்?


வானில் உயரே கிளம்பிய விமானம் தன் இலக்கினை சுற்றி இரண்டுமுறை வெறுமனே வட்டமடித்தது. மூன்றாவது சுற்று வந்தபோது எஞ்சினை நிறுத்தி...
இதே வேகத்தில் சீராகச் செலுத்து!
தன் சாகஸ வாழ்வின் மிக ஆபத்தான மிக பயங்கரமான பாராசூட் பயணத்தில் தான் இறங்குகிறோம் என்பதை அறியமாட்டான் **ஜேஸன்**


தன் அனுபவ அறிவால் இலக்கின் இடைவெளி தூரத்-
தைக் கணித்துக்கொண்டு கயிற்றை இழுத்தான். என்ன
கொடுமை...அன்றும் பழிவாங்கியது பாராசூட்!
ஹெக்! இதென்ன எதிர்பாராத பிரச்னை!


ஆனால் இத்தகைய பாராசூட் வீரர்களுக்கு ஆபத்துக்கு
உதவும் உபரி பாராசூட் ஒன்றும் உண்டு.
அதன் குடையை விரிக்க...
ஆவ்! பிழைத்தேன்!


மாடியின் மையவெளியில் இறங்கி...


பாராசூட் உடுப்புகளைக் களைந்து விட்டு, இர்வின் குறிப்பிட்ட காற்றுப்போக்கி அமைப்பினுள் இறங்கினான்


உடம்பை நெளித்து சிரமத்துடன், இரண்டாம் மாடி அறை கம்பித்தடுப்பினை அடைந்தான்...
இதுதான் அவர்கள் குறிப்பிட்ட அறை!


கம்பித்தடுப்பு இலகுவாய்ப் பெயர்த்தெடுக்க முடிந்தது.
மறுகணம், அறையினுள் நின்றான் ஜேஸன்பின் எதிர்ப்புற
ஜன்னலை நோக்கி ஓசையின்றி முன்னேறினான்.


இடுப்பிலிருந்த நைலான் கயிற்று ஏணியை உருவி நாற்-
காலி ஒன்றின் காலில் ஒரு முனையைப் பிணைத்து மறு
துனியை ஜன்னலின் வழியே தரைக்கு அனுப்பினான்...


கட்டிடத்தின் அப்பகுதி நிலவின் ஒளி-
விழாது இருண்டிருந்தது இர்வினும்
அவனது இருசகாக்களும் ஓசையின்றி
மேலே ஏறினர்...


இர்வின் முதலாவதாக அறைக்குள் இறங்கினான். நேராய்
சுவரோரம் இருந்த ஃபைல் அலமாரியை
நோக்கி சென்றான்...


கடைசி நபரும் உள்ளே வந்ததும் ஜன்னல் கதவினைச் சாத்தினான் ஜேஸன். சக்திவாய்ந்த டார்ச்சின் ஒளியில் இர்வினும் ஜார்ஜும் தஸ்தாவேஜுகளை ஆராய்ந்தனர்.
இந்த நான்கையும் போட்டோ எடுக்க வேண்டும், ஜார்ஜ்.


தாமதிக்கும் நிமிடங்கள் ஒவ்வொன்றும் யுகமாய்க் கழிய இர்வின் ஒவ்வொன்றாய்க் 'க்ளிக்' செய்தான்...



மறுகணம் டிரேக் கிசுகிசுப்-டிக்குரலில் எச்சரித்தான்...
ஹே, நாம் கீழே கட்டிப் போட்ட காவலனை ஆட்கள் பார்த்து விட்டார்கள் போலும்.
ஓ. கே. படிக்கட்டுகளின் வழியே இறங்கி பிரதான வாசலை கடந்து செல்வோம்.
தாழ்வாரத்தின் வழியே வந்து முதலாவது மாடி படிக்கட்டு களில் மெதுவான ஓட்டத்தில் இறங்கினர்.
திடீரென சாதாரண உடையணிந்த காவல் வீரர்கள் சிலர் அறை ஒன்றிலிருந்து வெளிப்பட்டனர். இர்வின் தன் பாக் கெட்டிலிருந்து கண்ணாடிக் குழலை ஒன்றை எடுத்து தரை யில் மோதி உடைத்தான், விளைவு...


அடுத்த படிக்கட்டுகளில் பெரும் ஓசையுடன் கீழிறங்கிய போது அபாயமணி ஒலித்தது. தரையில் கால்வைத்த வேளையில் சீருடையணிந்த காவலன் ஒருவன் அவர்களை எதிர்கொண்டான்.
ஹே, நீ நீங்கள் யார்?
இதென்ன புதுக்குழப்பம்! காவலனை ரஷ்யனல்லவா இருக்க வேண்டும்! ஆனல் இவனே அமெரிக்கன்...


உறைந்து நின்ற ஜேஸன்டிரேக்கின் காதில் துப்பாக்கி ஒன்று நீண்டிருக்கக் கண்டான். வயிற்றைப் பற்றியவனாய் குப்புற விழுந்தான் காவலன்.
அஹ்ற!
MP


பாய்ந்து சென்று கதவைத் திறந்தான் டிரேக். அதிர்ச்சியும் குழப்பமும் ஆட்கொள்ள கல்லாய் நின்ற ஜேஸனை தள்ளிக்கொண்டு போனான் இர்வின்...
என்ன இது... ம்ம்.. கிளம்பு!


எதுமே புரியாதவனாய் வெளியே வந்தான்ஜேஸன்பெருந் தவறு ஒன்று நடந்து விட்டதாக மனதில் ஓர் உணர்வு. ஆனால் கேள்வி கேட்கவோ விளக்கம் பெறவோ அவகாசமில்லாத பதட்டமான சூழ்நிலை...


இருண்ட சந்தில் கார் ஒன்று தயாராய் நிறுத்தப்பட்டிருந்தது தயங்கி நின்றான் ஜேஸன் இர்வினின் கைத்துப்பாக்கி முதுகில் லேசாய் அழுத்தியது...
ம்ம் ஏறு தகராறு பண்ணாமல்! உன்னைச் சுட எனக்கு விருப்பமில்லை ஜேஸன் ஆனால் விஷமம் பண்ணினால் வேறு வழியில்லை.
சீறிக்கொண்டு கிளம்பியது கார். வளைவு ஒன்றில் திரும்பிய வேளையில் பெரிய அறிவிப்புப்பலகை ஒன்றில் வண்டியின் முன் பக்க விளக்குகள் ஒளியைப் பாய்ச்சின...
NATO
EASTERN COMMAND
நேட்டோ தலைமையகம்! அப்படியானால் இது ரஷ்ய ஸ்தாபனமல்ல! என்னை இவர்கள் ஏமாற்றிவிட்டார்கள்!


இஸ்தான்புல்லின் வெறிச்சோடிய புறநகர்ப் பகுதியினூடே கார் விரைந்தது. திறந்த சமவெளிக்கு வண்டி வந்ததும் இர்வின் விளக்கம் கூறலானான்.
நடந்த சம்பவத்திற்கு வருந்துகிறேன் ஜேஸன்! அமெரிக்க நாட்டின் புதிய கண்டு பிடிப்பான நீர்மூழ்கி வழித்தடம் காட்டும் கருவி பற்றிய விபரக்குறிப்புகளை படம்பிடிக்க நீ எங்களுக்கு உதவியிருக்கிறாய். ஆகவே சதிவேலையில் நீயும் பங்கு பெற்று விட்டாய்!
நீ ஒரு துரோகி! ரஷ்யக் கைக்கூலி!
ஆம். உன் உதவி தேவைப் பட்டது ..பயன் படுத்திக் கொண்டோம்.
ஆ ஆனால் கர்னல் ஹைடன்... மேலதிகாரி கோயல் எப்படி இதில்?
நீ பார்த்த இருவரும் போலி நபர்கள். நாடகமாடி ஏமாற்றினோம் உன்னை.


அதேசமயம் விரைந்துகொண்டிருந்த கார் சிறு மேடு ஒன்றில் ஏற பெரிதாய்க் குலுங்கியது...


இமைப்பொழுதுநேரம் டிரைவரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட, ரஸ்தாவைவிட்டு கீழிறங்கியது வண்டி...
34


பின்பக்கச்சக்கரம் கல் ஒன்றில் இடிக்க தாக்குதலின்
விளைவாய் கதவு படாரென்த்திறந்தது.
ஜேஸன் வெளியே ாய்ந்தான்.


குப்புற விழுந்த ஜேஸன் அதிர்விலிருந்து விடுபடு
முன் நிறுத்தப்பட்ட காரிலிருந்து தாவி ஒடி
வந்தான் இர்வின். கைத்துப்பாக்கியால்
ஜேஸனின் முகவாயைத்
தாக்கினன்.


காரினுள்ளிருந்து முரட்டுக்குரலில் உத்தரவிட்டான் ஜார்ஜ் ...
அவனை இனிமேலும் நம்பக்கூடாது, இர்வின்... மிகவும் ஆபத்தானவன்! சுட்டுக்கொல்!
ஓ. கே. நான் பார்த்துக் கொள்கிறேன்!
அரைமயக்கத்திலிருந்த ஜேஸன் எதிரே இர்வின் நிற்கக் கண்டான். அவனது கைத்-துப்பாக்கி தீப்பிளம்பைக் கக்கியது.
ஜேஸன்-அசைவின்றிக்கிடக்க, காரை நோக்கி நடந்தான் இர்வின் ...
கொன்றுவிட்டேன் அவனை! உண்மையில் சுட மனமில்லைதான், அவன் மிக ஆபத்தானவனே!
வேண்டுமென்றே குறிதவறிச்சுடு-கிறான். என்னைக் கொன்றுவிட்டதாய் நாடகமாடுகிறான்..


இர்வின் வார்த்தைகள் ஜேஸனின் காதிலும் விழுந்தன.
இனி காற்றாய்ப்பறந்து மிடை.. நகர் போய்ச் சேருவோம். அழைத்துச்செல்ல நம் ஆட்கள் வியாழக்கிழமை அங்கே வருவார்கள்.
கார் கிளம்பிச் செல்வதைக் கண்டான் ஜேஸன் சிப்பாய்கள் தாங்கிய கார் ஒன்று அவ்வழியே விரைந்தது.
அவர்கள் என்னைப் பார்க்கவில்லை.
தொடர்ந்து மேலும் பல ஜீப்கள் அவ்வழியே வந்தன. மெதுவாய் ஊர்ந்து ஒளிய எத்தனித்த ஜேஸன் சிப்பாயின் கண்ணில் பட்டான்.
இவனும் அவர்களில் ஒருவன்தான்! பிடியுங்கள்!


ஓடித்தப்ப எண்ணிய ஜேஸனின் உடல் ஒத்துழைக்க மறுத்தது. அமெரிக்க ராணுவக் காவலர்கள் தூக்கி நிறுத்தினர்...
MP
ஓ.கே, ஜாக்... வண்டியில் ஏற்றுவோம்!
நேட்டோ தலைமையகத்திற்கு ஜேஸனை கொண்டு வந்தனர். அங்கே அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் பாது-காப்பு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டான்...
இக்கட்டிடம் ரஷ்ய உளவு ஸ்தாபனம் என்று எண்ணி நீ பாராசூட் மூலம் குதித்தாகக் கூறும் கதையை நாங்கள் நம்பவேண்டுமா?
நான் முழுக்க நம்பிய ஒருவன் என்னை ஏமாற்றி இதில் ஈடுபடச் செய்து விட்டான்.


ரொம்ப நல்லாத்தான் கதை சொல்கிறாய் தம்பி! விரைவில் நீதிமன்றத்தில் உன் கதையைக் கூறப்போகிறாய். உளவுபார்த்த குற்றத்திற்காக கூண்டிலேற வேண்டும் நீ!
...அதோடு கொலைக் குற்றமும் இவன் மேல் உண்டு. காப்டன்! நம் ஆள் ஒருவன் கொல்லப்-பட்டிருக்கிறானே, ஞாபகமில்லையா?


விசாரிப்பு முடிந்ததும்...
உன்னைத் துருக்கிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் போகிறோம் எங்களுக்கு இங்கே துருக்கியில் வழக்கு உரிமை கிடையாது.
MP
இஸ்தான்புல் சிறைச்சாலை பூலோக நரகம் என்பது விரைவில் உனக்குப் புரியும்!



நடந்தவாறே யோசித்
என்ன தான் எடுத்துக் கூறினாலும் நேட்டோ பாதுகாப்பு அதிகாரிகள் நம்பப் போவதில்லை...
நீதிமன்றத்திற்கு உன்னைக் கொண்டு போகப்போகிறோம்.


கார் ஒன்றில் ஏற்றப்பட்டான் ஜேஸன் இரண்டு பக்கமும் துருக்கிய காவலர்கள். மேலதிகாரி டிரைவரினருகே அமர்ந்து கொண்டார்.


கலடா பாலத்தருகே மொய்த்து நின்ற மக்கள் கூட்டத்-தினூடே விரைய இயலாது ஊர்ந்தது கார். ஜேஸனின் அருகே இருந்த ஒரு காவலன் கதவைத்திறந்து ஜனங்களை ஒதுங்கச் சொல்லி உத்தரவிட்டான்...
அப்பால் செல்லுங்கள்! ம்ம் ஒதுங்கி வழி விடுங்கள்.


சரியான சந்தர்ப்பம் என்பதை உணர்ந்த **ஜேஸன்** காலை வெளியே வைத்து ஒரு கையால் காவலனை உந்தித்தள்ளினான்...
ஊ ஊப்!
அடுத்த சில விநாடிகளில் கூட்டத்தினுள் புகுந்து விட்டான் **ஜேஸன்** இரண்டாவது காவலன் துப்பாக்கியை உருவினான். ஆனால் அப்பாவி மக்களும் உயிரை இழக்க நேரிடும் என்ற எண்ணம் தோன்றவே செய்வதறியாது நின்றான்...
டுர்! டுர்! போகாதே!


பின் தொடர்ந்து பிடிக்க முயன்ற காவலர்களுக்கு பெரும் இடைஞ்சல்


பாலத்தைக் கடந்து போக்குவரத்து நெரிசல் மிக்க ஒரு தெருவின் வழியே ஹைதார்பாஷா ரயில் நிலையம் நோக்கிச் சென்றான் ஜோஸ்.
இதுதான் இர்வின் குறிப்பிட்ட இடம்... அவன் தன் சகாக்களுடன் அங்குதான் மறைந்திருப்பான்.
MIDYE


ரயில்வே நிலையத்தில் துருக்கிய தேச வரைபடம் ஒன்று காணப்பட்டது.
இதோ மிடை... கருங்கடல் கரையோரம் அமைந்துள்ளது.
வாகனம் தேவைப்பட்டது. வழியில் நேட்டோ ராணுவகாவல் நிலையம் பார்த்தஞாபகம்வந்தது.
ஜீப் ஒன்றை வசப்படுத்திக் கொள்ள முடிந்தால்...
அந்தக் காவல் நிலையத்தை அடைந்தபோது இருட்டத் தொடங்கி விட்டது. கம்பத்தில் அமெரிக்கக் கொடி பறந்து கொண்டிருந்தது. வாயிலில் காவலர் எவரும் தென்படவில்லை ..
ஓரத்தில் இருக்கும் அந்த ஜீப் போதும்!


தரையோடு தரையாய் ஊர்ந்து சென்று
படாரெனத்தாவி ஸ்டியரிங்கைப்பற்றினேன்.
ஹே!
தடுத்து நிறுத்து அவனை!


இஞ்சின் உடனே இயக்கம் பெற
உறுமலுடன் கிளம்பியது வண்டி.
ஆபத்திலும் சிறிது அதிர்ஷ்டம் இருக்கிறது **ஜேஸன்** பையா! ஜீப்பில் உபரியாக பெட்ரோலும் பாதுகாப்பிற்கு ஒரு துப்பாக்கியும் உள்ளது.


முதல் விளைவை வேகமாகக் கடந்தான். அப்போது விரைவு ரகக்கார் ஒன்று கடும் வேகத்தில் நெருங்கி வருவதைக் கண்ணாடியில் கண்டான்.
இது நேட்டோ தலைமையகத்தில் காணப்பட்ட கார் ஆயிற்றே. சீரான சாலையில் அதன் வேகத்தோடு இந்த ஜீப் போட்டி போட முடியாது.


வண்டியை சாலையிலிருந்து விலக்கி குறுக்காக ஓட்டலானான் ப்ரூஸ் ..
கரடுமுரடான பாதையில் அந்த வண்டியைவிட என் ஜீப் வேகமாகச் செல்லும்!


கார் பின் தொடராமல் பார்த்துக் கொண்டான்.
இர்வினைக் கண்டுபிடித்து அவனிடமிருந்து வாக்கு மூலம் பெறவேண்டும்!
கருங்கடலை நெருங்கு முன்பாக நிலா எழுந்து விட்டது. சரிவில் சிறிய கிராமம் ஒன்று தென்பட்டது.
அதுதான் மிடை! நான் தேடும் நபர்கள் அங்குதானிருக்க வேண்டும்!
ஊரினுள் செல்லாமல் வழியில் மரத்தினடியில் ஜீப்பை நிறுத்திவிட்டு விடியும்வரை தூங்கினான். பின்னர் ஆட்கள் சிலர் ரஸ்தா ஒன்றினை செம்மைப் படுத்திக் கொண்டிருக்கக் கண்டான். முஸ்தபா என்ற பெயரைக் கூறினான்.
முஸ்தாபா ஜெமாலா? அதோ... அங்கே!


அம்மனிதன் கைகாட்டிய இடத்தில் பங்களா ஒன்றிருந்தது. ஜீப்பிலிருந்து துப்பாக்கியையும் மேலும் அதிகமாகத் தோட்டாக்களையும் எடுத்துக் கொண்டு நடந்தான் **ஜேஸன்**...


கட்டிடப் பக்கவாட்டில் நடமாட்டம் தென்பட்டது. தொடர்ந்து நால்வர் வெளியே வந்தனர்..
இர்வின், ஜார்ஜ், டிரேக்! நாலாவது நபர்தான் முஸ்தாபா என்பவனாயிருக்க வேண்டும்!


சரிவில் இறங்கி பங்களாவை நெருங்கி முன்பாக இர்வினும் அவனது சகாக்களும் வண்டியில் ஏறிக்கிளம்பி விட்டனர்.
த்சு! புறப்பட்டு விட்டனரே. ஆனால் எப்படியும் பிடித்தாக வேண்டும்!
விரைந்து ஜீப்பினை அடைந்து வேகத்தில் கிளப்பினான்...
கடற்கரையை ஒட்டிய ரஸ்தாவை நோக்கித்தான் செல்கின்றனர். பின்தொடர்வது எளிது-
அதே சமயம் உள்பிரதேசத்திலிருந்து தாழப் பறந்து வரும் ஹெலிகாப்டர் ஒன்றின் ஓசை கேட்டது.
ரஸ்தாவழியே பின் தொடர்ந்து இவர்களைப் பிடிப்பது சிரமம். குறுக்காகச் செலுத்தினால் அவர்களுக்கு முன்னால் சென்று விடலாம்.



மறுபடி ரஸ்தாவைவிட்டு விலக்கி கரடுமுரடான பாறைகளினூடே வண்டியை ஓட்டினான்.
வெறிபிடித்தவனாய் வண்டியை செலுத்தி ரஸ்தாவை அடைந்தபோது இர்வினின் கார் சற்று முன்னால் சென்று கொண்டிருந்தது.
ஏதோ ராணுவ ஜீப் ஒன்று நம்மைப் பின் தொடர்ந்து வருகிறது.
கண்ணாடித் தடுப்பை நொருக்கி அதனூடே துப்பாக்கியை நீட்டிச் சுட்டான் ஜேஸன்..
டயர்களைத் துளைக்க வேண்டும். இர்வினைக் கொல்வது என் விருப்பமல்ல!


சீறிவரும் தோட்டாக்களுக்கு எதிராய்த் தன் கைத்துப் பாக்கியைப் பயன்படுத்தின இர்வின்.


சிட்டாய் விரைந்து கொண்டிருந்த இர்வினது காரின் பின் சக்கரத்தைத் துளைத்தான் ஜேஸன்.
வேகத்தைக் கூட்டு ஜார்ஜ்! என்னாயிற்று வண்டிக்கு?
பின் டயரைச் சுட்டு விட்டான் வேகம் சாத்தியமில்லை!


சபித்தவாறே பாக்கெட்டினுள்ளிருந்து ஒரு கைவெடி-குண்டை எடுத்து ஜீப்பின் முன்னால் எறிந்தான் இர்வின். சாலையின் குறுக்காய் தீ பரவி ஜீப்பை மறித்தது. ஆனால் அதை லட்சியம் செய்யாமல் உட்புகுந்தான் ஜேஸன்...
பாவி... நிறுத்தாமல் தீயினூடே புகுந்து வருகிறானே!


ஜேஸனின்சாகஸ ரத்தம் மேலும் சூடேறியது. ஆவேசம் கொண்டவனாய் வண்டியின் வேகத்தை மேலும் கூட்டினான்.
அருகே நெருங்கி விட்டேன்!


காரிலிருந்து திரும்பிப்பார்த்த டிரேக் ஜீப் டிரைவரை அடையாளம் கண்டு கொதிப்புற்றவனாய் உறுமினான்.
ஜேஸன்! ஏய் . இர்வின்... அறிவுகெட்ட முண்டமே! அவனைக் கொன்றுவிட்டதாகவல்லவா கூறினாய்!


வெறிபிடித்த பிசாசாய் இர்வின் மீது பாய்ந்தான்...
தடிமாட்டுப் பயலே எல்லாவற்றையுமே! நாசமாக்கி விட்டாயே அவன் முன்னாள் தோழன் என்பதுதானே காரணம்?


இர்வின். டிரேக்கை பதிலுக்கு விளாச,
அவன் டிரைவரின் மேல் சாய்ந்தான்...
அஹ்ற!


கட்டுப்பாடிழந்த கார் கணவேகத்தில் பாதையோர
மரத்தடுப்புக்களை முறித்துக்கொண்டு
முகட்டின் வெளியே பறந்தது...
ஆஆஆ!


கர்ணம் அடித்து பாறை விளிம்பொன்றில் மோதி...
அந்தரத்தில் கீழ் நோக்கிப் பாய்ந்தது..


ஜீப்பை பிரேக் போட்டு நிறுத்தி இறங்கி ஓடோடி வந்தான்...ஜேஸன்...
விளிம்பில் விழுந்திருப்பவன் இர்வின்! இறந்து விட்டானா?


பாறையைப்பற்றி கீழே
இறங்கியபோது இர்வின்
முனங்கியவாறே விளிம்பு
நோக்கிப் புரண்டான்...
ஐயோ! வேகமாய் இறங்கி
அவனைப்பிடிக்கா விட்டால்
கீழே விழுந்து செத்துத்
தொலைத்து விடுவான்.
இர்வின் அரைகுறை நினை
வில் இருந்தான். ஜேஸனை
மேல்நோக்கிப்பார்த்தான!
அருமை...
நண்பா..
ஜெயித்து
விட்டாய்... நீ!
மிடைநகர் பயணமான ஜேஸனை ஆரம்பத்திலிருந்தே
தேடிவந்த ஹெலிகாப்டர் அதிகாரிகள் கார்களில்
விரைந்து சம்பவம் நடந்த இடத்தை வந்தடைந்தனர்...
ஆள் அகப்பட்டு
விட்டான்!


ஜேஸனையும் இர்வினையும் குன்றின்
மேலே கொண்டுவந்தனர். பாது-
காப்பு அதிகாரி ஒருவர் கைக்காப்
பினை எடுத்து நெருங்கி வரக்கண்ட
ஜேஸனின்முகம் வாடித்தொங்கியது.
நான் கூறும் கதையை இவர்கள் நம்பமாட்டார்கள். நிருபிப்பதற்கான ஆதாரமும் இல்லை!


இறந்து விட்டானென ஜேஸன் கருதியிருந்த இர்வின் ஏதோ
லேசாய் முணுமுணுத்தான்...
அவன் அவனுக்கு இதில் சம்பந் தமில்லை. நாங்கள் அவனை ஏமாற்றி விட்டோம். உங்களுக் காக-அமெரிக்காவுக்காக இதில் பணியாற்றியதாக நினைத்திருந்தான்... அவன்!






ஜேஸனின் அடுத்த சாகஸம் என்ன?
61ம் பக்கத்தைப் புரட்டி படிக்க ஆரம்பியுங்கள்!


விச்சு & கிச்சு
மதியம் மிஸ்டர் ஜான் குழுவினருடன் சவாரி செல்லப் போகிறேன் கிச்சு! நீயும் வருகிறாயா?
ஓ! வருகிறேன்! எத்தனை மணிக்கு?
ரேஸ் கிளப்பிற்கு எதிரே, சரியாக இரண்டு மணிக்கு காத்திருப்போம்! வந்துவிடு, கிச்சு!
ஓ. கே!
பின்னர்—
மிஸ்டர் ஜான், பிரபல குதிரை வீரர் அல்லவா? அவரோடு சவாரி செல்வதாயின் இந்த சாதா உடுப்புகள் போதாது!
புகழ்ச்சியாக சொல்லவில்லை மிஸ்டர் கிச்சு- இந்த வேட்டைக்கார உடுப்பில் உங்களைப் பார்க்கும் பொழுது ரொம்ப ராஜகளையாக உள்ளது!
ஹா! ஹா! ஹா! கிச்சு கண்ணா- அசத்தி விட்டாய் போ!
59



லாயம்
எல்லாவற்றையும் வெளியே இட்டுவா பார்ப்போம்! நயம் குதிரைதான் வேண்டும் ஐயாவுக்கு!
கம்பீரமாய் நான் போய் நின்றவுடன் விச்சுவின் முகத்தைத் தான் பார்க்க வேண்டுமே!...
ஹல்லோ விச்சு! சவாரிக்குத் தயாரா நீ?
கி-கிச்சு...
வ-வந்து நாங்கள் சைக்கிள் சவாரி செல்லப் போகிறோம் கிச்சு-குதிரைச் சவாரி அல்ல!

# தேள் தீவு மர்மம்!

ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் அமைந்ததொரு சின்னஞ்சிறு தீவான குர்மியின் மீது புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கவனத்தை செலுத்தியபோது அங்கே சுமார் 2000 ஆண்டுகளாக புதையுண்டு கிடந்த சில இரகசியங்கள் வெளியானதோடு பல தேவையில்லாத பிரச்னைகளும் தலைதூக்கின...




அந்நாளில் கருந்தேள் தீவு என்று சிறப்புப்பெயர் கொண்ட குர்மி தீவை நோக்கி விரைந்துகொண்டிருந்தது பாய்மரக் கப்பல் ஒன்று.
அங்கே பார் தீபஸ்! எரிமலை சீறத்தொடங்குகிறது இந்த வேளையில் தீவுக்கு செல்வது உசிதமான காரியமல்ல.
குமுறும் எரிமலையைக் கண்டு அஞ்சி வழக்கத்திலிருந்து பிறழ நானென்றும் உன்னைப்போல் கோழையல்ல...


சில நிமிடங்களுக்குப் பின் தங்கப்பாளங்களையும் வெள்ளித் தட்டுகளையும் சுமந்துகொண்டு சிறு படகு ஒன்று தீவை நோக்கி விரைந்தது.
ஹே தீபஸ்! அந்த எரிமலையை நாம் பார்க்கும்போது டாமரஸ் நகரை நாம் முற்றுகையிட்டபோது தீப்பந்தங்களை நம்மீது வீசினார்களே அந்தக்காட்சிதான் என் நினைவுக்கு வருகிறது...
அன்று நம்மீது வீசிய அதிர்ஷ்டக் காற்று இன்றைக்கும் எரிமலையின் சீற்றத்திலிருந்து நம்மைக் காக்கும்!


படகிலிருந்த காணிக்கை பொருட்களை கோவிலுக்குள் கொண்டுபோய் சேர்க்க இரண்டுமுறை நடக்க வேண்டியிருந்தது.
எரிமலையின் கொந்தளிப்பால் தீவு நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது வேலையைமுடித்துக்கொண்டு பத்திரமாக கப்பலுக்கு போய்ச் சேருவோம்!
கருந்தேள் தீவு என்று காரணப் பெயர் கொண்ட. இந்த தீவில் ஒவ்வோர் அடியையும் கவனமாக எடுத்துவைத்தாலன்றி உயிரோடு ஊர்போய்ச் சேரமுடியாது !
காணிக்கையை செலுத்திவிட்டு அந்தக்கூட்டம் மீண்டும் பயணத்தை தொடங்கும்வரை மௌனமாக பார்த்துக்கொண்டு நின்றிருந்தார் சாம்ரா-கோவில் பாதுகாப்பாளர்!
காணிக்கைப் பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று இரகசிய சேமிப்பு அறையினுள் பத்திரப்படுத்தலானார்.


நேரம் செல்லச் செல்ல எரிமலையின் சீற்றம் உக்கிர மடைந்து கொண்டே வந்தது. சாம்பலும் கொதிக்கும் குழம்பும் தீவு எங்கிலும் வாரியிறைக்கப்பட்டது.


ஆறாக ஓடி வந்த தீக்குழம்பு கோவிலின் மீது பாயத்தொடங்கியபோது தன்னுடைய நீண்ட கால தெய்வப்பணி ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை புரிந்து கொண்டார் சாம்ரா.
இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து நிற்கத் திராணியில்லாத கிழவன் நான். வாழ்நாள் முழுவதையும் தெய்வப் பணிக்கே அர்ப்பணம் செய்துவிட்ட நான் உயிரையும் அந்த தெய்வத்தின் வசம் ஒப்படைக்க வேண்டிய வேளை வந்து விட்டது.


கருந்தேள் தேவனை வணங்கிவிட்டு அவனுடைய காலடியில் தான் கொண்டு வந்து வைத்த கூடையி னுள் மெள்ள ஆனால் தீர்மானமாக கையை விட்டார் அந்த முதியவர்.
உள்ளேயிருந்த கருந்தேள்களின் விஷம் வீரியமுடையது-விரைந்து செயல்படக்கூடியது.


எரிமலையின் கொந்தளிப்பினால் குர்மி தீவின் அமைப்பே மாறிப்போனது யாரும் அங்கே செல்லவில்லை. இச்சம்ப வம் நடந்து சுமார் 2000 ஆண்டுகளுக்குப்பின்-மனித சமு தாயம் மறந்து விட்ட அந்த சிறு தீவு திடீரென்று ஒருநாள் செய்தித் தாள் களில் இடம் பிடித்துக்கொண்டது.
ஆராய்ச்சியாளன் காணவில்லை. குர்மியில் கொலையா?
என்னது புரபஸரை டிங்கர் கொலை செய்து விட்டானா சுத்த அபத்தம்! நம்பும்படியாக இல்லை ..!



டிங்கர் ஜேஸனின் நெருங்கிய நண்பன புரபஸர் கில்பிரைட் அந்நாளில் அவர்களுடைய சரித்திர பேராசிரியர்.
எமிலி பாவம்! தந்தையை இழந்துவிட்டது ஒருபுறம்- காதலன் எங்கோ ஓர் இத்தாலிய சிறையில் அடைபட்டுக் கிடக்கிறான். விரைந்து சென்று உதவ வேண்டும்!
உடனடியாக குர்மி தீவுக்கு சென்று எமிலிக்கு உதவி செய்யவேண்டிய கடமை எனக்குண்டு.
பயணத்தின் முதற்கட்டமாக பிரிண்டிஸி நகருக்கு விமானத்தில் போய்ச் சேர்ந்தான் ஜேஸன்.


அங்கிருந்து மூன்று மணி நேர கார் பயணத்திற்குப்பின் ப்ளோரினோ நகரை சென்றடைந்தான்... அங்கே மீன்பிடி துறைமுகம் உண்டு.
அதோ.. தெரிகிறது பாருங்கள் அதுதான் ப்ளோரினோ நகரம்.
முதலில் டிங்கரை சந்திக்க வேண்டும்.
போலீஸ் ஸ்டேஷனில் -
புரபஸரோடு டிங்கர் காரசாரமாக சண்டையிட்டுக்கொண்டிருந்ததை நான்கு பேர் பார்த்திருக்கிறார்கள்!
காரசாரமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தானா- அல்லது.. விவாதித்துக் கொண்டிருந்தானா? இன்ஸ்பெக்டர் நான் அவனை சந்திக்க முடியுமா?
ஹேய் ஜேஸன்! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?
உன்னிடம் நான் கேட்க வேண்டிய கேள்வி அது? என்னடா இதெல்லாம்!



டிங்கர் நடந்தவைகளை நண்பனிடம் விவரித்தான். கடைசியாக அவன் புரபஸரோடு காரசாரமாக வாக்குவாதம் செய்தது-குர்மியில் தோண்டி எடுக்கப்பட்ட ஒரு பொருள் எந்தக் காலத்தை சேர்ந்தது என்பதைப் பற்றியது என்று சொன்னான்.
பிறகு என்ன நடந்தது?
அங்கே கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டமும், கோவில் ஒன்றின் சிதைவும் எட்ருஸ்கான் காலத்தை சேர்ந்தது என்பது புரபஸரின் வாதம். வெறும் தர்க்க வாதம் தான் சண்டையில்லை.
மலைச்சரிவைநோக்கி அவர் சென்றார் நான் ஆராய்ச்சி இலக்கை நோக்கி நடந்தேன்.
தகவல் எதுவும் டிங்கரிடமிருந்து கிடைக்கவில்லை.
எமிலியை சந்தித்து உடனே அவள் இங்கிலாந்துக்கு திரும்பும் படி செய்ய வேண்டும் நீ.
முயற்சிக்கிறேன் ! அத்தோடு உன்னை இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்க என்னால் ஆனதை செய்வேன்.


மீன்பிடி படகின் சொந்தக்காரன் ஜேஸனே அங்கிருந்து ஆறு மைல் தொலைவிலிருந்த குர்மி தீவுக்கு அழைத்துச்செல்ல இசைந்தான்...
அதோ தெரிகிறதே. அதுதான் குர்மி- 'கருந்தேள் தீவு'
கருந்தேளா? கேட்கவே பயமாக இருக்கிறதே!
படகைக் கவனித்துவிட்ட எமிலி தன் தோழன் டிங்கர் பற்றிய விபரம் கிடைக்கும் என்ற ஆர்வத்தோடு காத்துக்கொண்டு நின்றாள்.
ஓ ஜேஸன்- டிங்கரைப் பற்றியும் அப்பாவைப் பற்றியும் கேள்விப் பட்டீர்களல்லவா!
பேப்பரில் படித்து தெரிந்து கொண்டேன் எமிலி.. உனக்கு உதவத்தான் விரைந்தோடி வந்தேன்.


எமிலிக்கு தேறுதல் வார்த்தைகள் கூற ஜேஸன் முற்பட்ட போது இரு நபர்கள் அங்கே வந்து சேர்ந்தனர்.
நீங்கள் மிஸ் எமிலிக்கு வேண்டிய நண்பரா! அவளை இங்கிலாந்துக்கு திரும்ப அழைத்துச்செல்ல வந்திருக்கிறீர்களா?


அவர்களை ஜேஸனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள் எமிலி ...
இவர் கார்டன் அவர் கார்லோ... இவர் பெயர் ஜேஸன்- பழைய நண்பர்!
இங்கிலாந்துக்கு உடனே திரும்பிச்செல்ல இவளை வற்புறுத்தவே இங்கு வந்தேன் நான்..


ஹூம். புரபஸர் ஒரு சிறந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர். டிங்கர் இப்படியொரு காரியத்தை செய்வான் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.
காரசாரமான தர்க்கம் அதோ அந்த மேட்டில் தான் நடந்தது அங்கே வாருங்கள் விபரமாகச் சொல்கிறேன்.
அவன் சுட்டிக்காட்டிய மேட்டின் நேர்கீழே கடல் ஆரவாரித்துக் கொண்டிருந்தது.
இருவரும் மாறி மாறி உரத்த குரலில் தர்க்கமிட்டுக் கொண்டிருந்ததை கேட்க முடிந்தது கோபத்தில் டிங்கர் அங்கிருந்து கடலுக்குள் புரபஸரை தள்ளி விட்டிருக்க வேண்டும்.
டிங்கருக்கும் அப்பாவுக்கும் அடிக்கடி கருத்து மோதல் ஏற்படுவது வாஸ்தவம் தான்-ஆனால் பகைமையுணர்ச்சி ஏற்பட்டதில்லை!



தோண்டுமிடத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றான் கார்டன்
இந்த குகைப் பாதை எங்கே போகிறது?
புதைந்து கிடைந்த கோவிலை கண்டுபிடித்தோம் நாங்கள். இது எட்ருஸ்கான் காலத்தைச் சேர்ந்ததா? கிரேக்கர்கள் காலத்தை சேர்ந்ததா- என்பதைப்பற்றி புரபஸரிடம் தர்க்கம் பண்ணிக்கொண்டிருந்தான் டிங்கர்.




குகையினுள் குளிர்ச்சியாக இருந்தது. தலைக்குமேலே பல நூற்றாண்டுகளுக்குமுன் வந்து தங்கிய எரிமலை குழம்பு இருகிப்போயிருந்தது.
கோவிலுக்கு அருகாமையில் இரகசிய பெட்டக அறை இருக்கக்கூடும் என்பது புரபஸரின் யூகம்.


பின்னர் எமிலியோடு தனியாக இருந்தபோது ..
நீ என்னோடு இங்கிலாந்துக்கு திரும்பிவிடு அதைத்தான் டிங்கரும் விரும்புகிறான்,
நானெப்படி வரமுடியும் ஜேஸன்? அப்பா ஒரு முக்கிய மான கண்டுபிடிப்பை ஏறத்தாழ நெருங்கி விட்டிருந் தார்...எட்ருஸ்கான் மொழியைப் புரிந்து கொள்ள தேவையான விளக்கம் இங்கே கிடைக்கக்கூடும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு!


தங்களுடைய கூடாரத்துக்கு ஜேஸனை அழைத்துச் சென்றாள் எமிலி.
புரபஸர் காணாமற்போனபோது தன்னோடு எடுத்துச் சென்றிருக் கக்கூடும்...கார்டனை கேட்டுப் பார்ப்போம்–அவனுக்குத் தெரியுமா என்று.
ஐயோ.. குறிப்பு களை காணோமே...! இந்தப்பெட்டியில் தானே இருந்தது?


ஜேஸன் இந்த விஷயத்தை உணவு வேளையில் பிரஸ்தாபித்த போது அதைக்கேட்டு இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் சிரித்தனர்...
புரபஸரின் கணிப்பு வேடிக்கையானது! தங்கச்சுரங்கத்தில் ஆராய்ச்சி நடத்துபவர்களைப்போலத்தான் நாங்களும். ஒருநாள் . ஏதாவது கண்டுபிடிப்போம் என்ற நம்பிக்கை தான் எங்கள் உழைப்புக்கு ஆதாரம்...


புரபஸர் எழுதிவந்த குறிப்புகள் பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்று கார்டன் சொன்னான்.
நீங்கள் நீண்டநாட்களுக்கு இங்கே தங்குவதாக உத்தேசமா?
புரபஸர் உயிரோடு இல்லை என்பது உறுதியாகும் வரை அவரைதேடும் முயற்சியை இங்கே தொடர எண்ணியுள்ளேன்.


ஜேஸன் சென்டாரின் இத்தாலிய இளைஞர்கள் தங்களுக்குள் அடிக் குரலில் பேசலானார்கள்.
அவன் இங்கே இருப்பது நமக்கு இடைஞ்சல்...
தற்செயலாக நிகழ்ந்தது போல் ஒரு விபத்தை உரு வாக்கிவிடலாம் நம்மீது சந்தேகம் எழாது...
மறுநாள் ஜேஸனும் எமிலியும் தீவைச் சுற்றிப்பார்க்க கிளம்பி னார்கள்...
புறப் படட்டுமா?
அவசரப்படாதே .. நீ கிளம்பிச் செல்வது அவர்களுக்குத் தெரியக் கூடாது!


ஒரு மணி நேர அலைச்சலுக்குப் பின்-
எழுந்திரு எமிலி ..இன்னும் கொஞ்சதூரம் மேலே சென்று பார்ப்போம்..
எந்தப் பயனுமில்லை ஜேஸன் ..! ஆனாலும் அப்பா இறந்து விட்டதாக இன்னமும் நம்ப மறுக்கிறது என் மனம்.


சில நிமிட பயணத்திற்குப் பின் ஒரு பெரும பள்ளத்தைக் கண்டார்கள்.
எதற்கும் கீழே இறங்கிச் சென்று பார்த்து விடுவது நல்லது!
வாருங்கள் போகலாம்!


பள்ளத்தின் சுவர்கள் உறுதியாக இல்லாததால் இறங்குவது கஷ்டமாக இருந்தது.
மெள்ள-கவனமாக.!


தற்செயலாக மேலே பார்த்த ஜேஸன் திடுக்கிட்டான்...
ஓ ..பெரிய பாறை உருண்டு வருகிறது கீழே!


மின்னலென செயல்பட்டான் ஜேஸன்...
பாறையோடு ஒட்டிக் கொள் ..எமிலி! சீக்கிரம் !
அதிர்ஷ்ட வசமாக பாறைச் சரிவின பாதையிலிருந்து விலகித் தப்பித்தனர் இருவரும்.
உயரே யாரோ ஓடுவது தெரிந்ததே - இல்லை வெறும் பிரமையோ!
அதிர்ந்து போயிருந்தாலும் அவர்கள் தேடும் முயற்சியை கைவிட்டுவிடவில்லை... அங்கே புரபஸர் இருப்பதற்கான அறிகுறி தென்படாததால் மேலேறி வந்தனர்.
இன்றைக்கு இதுபோதும் ஜேஸன்...
நீ ரொம்பவும் அதிர்ந்து போயிருக்கிறாய்...வா உன்னுடைய கூடாரத்துக்கு திரும்பி போகலாம்!


குன்றின் அடிவாரத்தை அவர்கள் வந்தடைந்த போது கார்டன் எதிர்ப்பட்டான்.
மிஸ் எமிலி! முகத்தில் ஏன் இத்தனை சோகம்?
மேலே பாறைச் சரிவு ஒன்று நிகழ்ந்தது. மயிரிழையில் உயிர் பிழைத்தோம்- அந்த அதிர்ச்சிதான்!
கார்டனின் பேச்சில் இப்போதும் செயற்கைத் தன்மை இருந்ததை ஜேஸன் கவனிக்கத் தவறவில்லை.
ப்ளோரிடா போலீஸ் அதிகாரி, மிஸ் எமிலி நாளை விசாரணை ஒன்றில் சாட்சி சொல்ல அங்கே வரவேண்டும் மீனவன் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறார்.
ஜேஸன் ஒத்துக் கொள்ளவில்லை.
நாளை அவளை நான் அழைத்துச் செல்கிறேன்! படகு ஒன்று கிடைக்குமா?
கார்டனின் முகத்தில் அதிருப்தி நிலவியது...



மறுநாள் காலை ஜேஸனும் எமிலியும் படகில் கிளம்பினர்.
ஓரிரு நாட்கள் நாங்கள் அங்கே தங்க நேரிடலாம் மிஸ்டர் கார்டன்.
துயர நினைவுகளைத் தூண்டும் இந்தத் தீவைவிட்டு விலகி இருப்பது மிஸ் எமிலிக்கு சற்று மனச்சாந்தியை கொடுக்கக்கூடும்.
கரையைவிட்டு பார்வையில் படாத தொலைவு வந்ததும் ஜேஸன் படகின் எஞ்சினை அணைத்தான்.
கார்டன் மீது உங்களுக்கு ஏன் இத்தனை சந்தேகம் ஜேஸன்? அவன் அப்படி தப்பாக என்ன செய்திருக்கக் கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்!
குறிப்பிட்டு சொல்ல ஏதுமில்லை என்றாலும் தீவைவிட்டு நம்மை எப்படியேனும் வெளியேற்றிட அவர்கள் துடிக்கும் துடிப்பு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. நீ நேராக ப்ளோரிஜேவுக்குச்செல் நாளைவரை என்னிடமிருந்து தகவல் ஏதும் வராவிடில் போலீஸ் இன்ஸ்பெக்டரை அழைத்துக்கொண்டு தீவுக்கு வந்துசேர்.


நீரினுள் குதித்து தீவை நோக்கி நீந்தலானான் ஜேஸன்.
தப்பாக புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். எதற்கும் எச்சரிக்கையோடு நடந்து கொள்ளுங்கள்.
தீவின் பக்கவாட்டில் வந்து சேர்ந்தது நல்லதாயிற்று யாரும் என்னை இங்கே எதிர் பார்க்கமாட்டார்கள்.
குன்றின் அடியோரத்தை அவன் வந்தடைந்தபோது யாரும் கண்ணில் படவில்லை.


சுற்றிலும் பார்வையை சுழலவிட்டவாறு மிகுந்த
எச்சரிக்கையோடு குன்றின் மீது ஏறலானான் ஜேஸன்.
ரொம்ப சுறுசுறுப்பாக இயங்கிக்
கொண்டிருக்கிறார்கள் கார்டன்
இங்கேதான் இருப்பானோ?
அப்போது கார்டன் சுரங்கத்
தின் உள்ளே வேறேரு முக்
கியமான காரியத்தில்
ஈடுபட்டிருந்தான்.
மறைவிலிருந்த விசையை
அவன் அழுத்த, கல்லால்
ஆன பெரிய கதவு சுழன்று
வழி விட்டது.


உள்ளே –
ஹலோ புரபஸர் இரவு முழுவதும் மொழிபெயர்ப்பு வேலையில் மும்முரமாக ஈடுபட்டீர்களல்லவா!
அயோக்கிய ராஸ்கல்..! உன் எண்ணம் ஈடேறாது!
கார்டனின் குரலில் கடுமை ஏறியது.
இரகசிய சேமிப்பு அறைக்கு வழிகாட்டும் குறிப்பை மொழி பெயர்த்துக் கொடுக்காமல் நீ இங்கிருந்து வெளியேற முடியாது!
அந்த அச்சுறுத்தலால் மிரண்டு போன புரபஸர் துள்ளி எழுந்தார்.
என்னால் முடிந்தவரை மொழி பெயர்ப்பு செய்திருக்கிறேன் என் மகளுக்குமட்டும் எந்தக் கெடுதலையும் செய்துவிடாதே!


அங்கே திடீரென்று பிரச்னை முளைத்தது ஜேஸனுக்கு!
ஓ. பிரிட்டிஷ்காரனா! வேவு பார்க்க வந்தாயா— தூக்கு கைகளை!
ஓ!


எழுந்து நிற்க நிமிர்ந்த ஜேஸன் கையில் அள்ளி எடுத்த மணலை எதிரியின் முகத்தில் வீசினான்
ஆ...வ்!


எதிர்பாராத தாக்குதலால் சற்று தடுமாறிய எதிரியின்மீது புயலென பாய்ந்தான் ஜேஸன்!
கெட்டது காரியம்-துப்பாக்கி முழக்கம் மற்றவர்களை இங்கே ஓடிவரச் செய்து விடக்கூடும்.


எதிரியின் கையிலிருந்த துப்பாக்கியை பறிக்க முயன்ருன் ஜேஸன்
ஓடி வாருங்கள்... கார்லோ யாரையோ பிடித்திருக்கிருன்.


அவர்கள் வந்து சேருமுன் தன்னை விடுவித்துக்கொண்ட ஜேஸன் கார்லோவின் தாடையில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.
ஜார்ஜ்! அவனைப் பிடி!
ஊப்..!
கார்லோவின் கையிலிருந்து பறந்து அப்பால் போய் விழுந்த துப்பாக்கியை நோக்கிப் பாய்ந்தான் ஜேஸன். இத்தாலிய இளைஞர்கள் அவன் மீது பாய்ந்தார்கள்.
அட. இவன் - ஜேஸனல்லவா!
உர்ம்.. ம்!


ஜேஸனை அவர்கள் தூக்கி நிறுத்திய போது அங்கே கார்டன் வந்து சேர்ந்தான்.
விடுங்கள் குரல் வளையை அறுத்து விடுகிறேன்!
முட்டாளே! தோண்டும் வேலை நிறைய இருக்கிறது.. ஜேஸன் திடகாத்திரமாக இருக்கிறான் நன்றாக வேலை வாங்கிவிடுவோம்-பொறு!
ஜேஸனை தோண்டுமிடத்துக்கு கொண்டு சென்று வேலை செய்யப் பணித்தான் கார்டன்.
ஏதாவது விஷமம் பண்ண நினைக்காதே - தோலை உரித்துவிடுவேன்!



இவர்கள் நோக்கம் என்ன என்று புரிந்து கொள்ள முடியாத குழப்பத்தோடு வேலையில் ஈடுபட்டான் ஜேஸன்.
புரபஸர் காணாமற்போனதற்கு இவர்கள்தான் காரணமாக இருக்க வேண்டும். ஆனால் காரணம் தான் புரியவில்லை.
வேலை முடிந்தது. ஜேஸனை சுரங்கத்தின் ஒரு கிளைப்பாதை வழியே கொண்டு சென்றார்கள்.
என்னை எதற்காக இங்கே கொண்டு வந்திருக்கிறாய்?
விசையை திருகி கல்லால் ஆன கதவை திறக்கச்செய்த கார்டன் ஜேஸனை உள்ளே தள்ளிவிட்டான்.
உள்ளே போ...! போய் நன்றாகத் தூங்கு!


கதவு தாளிடப்பட்டதும் பின்னல் திரும்பிய ஜேஸனுக்கு கண்ணெதிரே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது!
புரபஸர் ..! நீங்களா..! உயிருடன்தான் இருக்கிறீர்களா ..!
யார்...யார்..? ஜேஸனா..! நீ எப்படியடா பயலே இங்கே வந்து சேர்ந்தாய்?
தான் தீவுக்கு வந்து சேர்ந்த கதையை விவரித்தான் ஜேஸன்.
இந்த அயோக்கியர்கள் ஏன்தான் இப்படி நடந்து கொள்கிறார்கள் புரபஸர்?
எட்ருஸ்கான் மொழி எழுத்துக்களை மொழிபெயர்க்க கற்றுக் கொண்டு விட்டேன் நான். இந்தக்கல்வெட்டில் புதையல் இருக்கும் இடத்திற்கு செல்லும் வழி குறிப்பிடப்பட்டுள்ளது.
ஓகோ.. அந்த இடத்தைத்தான் இப்போது தோண்டிவருகிறார்களா?



எதிரிகளின் கை ஓங்கியிருக்கும் நிலையை எண்ணி சோர்ந்து போனான் ஜேஸன்.
அவர்களை தடுத்து நிறுத்த வகையில்லையா புரபஸர்?
புரபஸர் ரொம்ப உற்சாகமாக செயல்படத் தொடங்கினார்.
நன்றாக மூச்சை உள்ளிழுத்து விடு ஜேஸன்-என்ன உணருகிறாய்?
சுத்தமான வெளிக்காற்றின் மணம்! அதெப்படி... ?
ஆம் என்பதாக தலைமை ஆட்டிய புரபஸர் அந்த அறையின் கூரையை சுட்டிக்காட்டினார்... அவர் காட்டிய இடத்தை கூர்ந்து நோக்க மேலே ஏறினான் ஜேஸன்.
உங்கள் கூற்று சரியானது புரபஸர்! இங்கே சிறு இடைவெளி இருக்கிறது. இந்த கல்லுக்குப்பின்னால் காற்று வரும் 'வாய்க்கால்' இருக்கக்கூடும்.


அறையினுள் கிடந்த கம்பியை பயன்படுத்தி அந்த கல்லை பெயர்க்க முயன்றான் ஜேஸன்.
நீண்ட நேர கடும் முயற்சிக்குப் பின்னரே கல்லை பெயர்க்க முடிந்தது. அந்த முயற்சியில் ஜேஸன் மிகவும் களைத்துப் போனது மட்டுமின்றி அவன் கைகளும் எரிச்சல் எடுத்தன...
ஒரு வழியாக பெயர்த்துவிட்டேன் புரபஸர்!
பாவம்.. ரொம்ப சிரமப்பட்டு விட்டாய்!


புரபஸரின் வசம் சிகரட் லைட்டர் ஒன்று இருந்தது.
இந்த துவாரத்தின் மறு-கோடி எங்கோ திறந்த வெளியில் போய் முடியக்கூடும்!


அடுத்து ஜேஸன் செய்ய நினைத்த காரியத்தை புரபஸர் ரசிக்கவில்லை.
ஆமாம் மறுக்க முடி-யாத உண்மைதான் அது..! ம்-சரி... கவனமாக நடந்துக்கொள்..!
நான் செல்லத்தான் வேண்டும் புரபஸர். விஷயம் இத்தனை தூரம் வந்து விட்டபின் அவர்கள் நம்மை உயிரோடு வெளியில்விட மாட்டார்கள்.



தூவாரம் மிக குறுகலாக இருந்ததால் படுத்தபடி ஊர்ந்து அங்குலம் அங்குலமாக முன்னேறிச் செல்ல வேண்டியிருந்தது.
கொஞ்ச தூரம் சென்றபின் லேசான சலசலப்பு சப்தம் கேட்ட்து.
என்ன சப்தம ?
சிகரட் லைட்டரை ஏற்றி ஞன்.. மறுகணம் அவனு டைய முதுகுத்தண்டு ஜில்லிட்டுப் போனது.
தேள்கள்...!


கீழே - மேலே பக்கவாட்டில்-எங்கு பார்த்தாலும் நூற்றுக்கணக்கான ராட்சஸ தேள்கள் ஊர்ந்து கொண்டிருந்தன.
ஆனால் திரும்பிச்செல்ல வகையில்லை முன்னேறித்தான் சென்றாக வேண்டும் வருவது வரட்டும் என்று தீர்மானித்தவனாக ஜேஸன் தொடர்ந்து நகர்ந்தான்.
அவனுடைய முதுகின் மேலும் கால்களின் மேலும் பல தேள்கள் விழுந்து ஊர்ந்ததை அவனால் உணர முடிந்தது ..ஆனால் விபரீதம் ஏதும் நிகழ்ந்து விடவில்லை.
ஆவ்..!


வழியில் இருந்த பெரும் பள்ளத்தினுள் தலைகுப்புற விழவிருந்த ஜேஸன் தெய்வாதீனமாக சமாளித்துக் கொண்டான்...


எதிர்முனை ஐந்தடி தொலைவிலிருந்தது - அந்த இடைவெளியைத் தாண்டியாக வேண்டும்...
ஒன்...டு... த்ரீ- இதோ...!


ஒரே பாய்ச்சல்...


.. வந்து விட்டேன்!


அதன் பிறகு முன்னேறிச் செல்வது மிக மிக சுலபமான காரியமாக இருந்தது ...சில அடி தூரம் சென்றபின்-
அதோ அவர்களின் பாசறை! ஐந்துபேரை நான் சமாளிக்க வேண்டி வரும் என்று கருதுகிறேன்!
முதலாமவனை சந்திக்க அதிக தூரம் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை ஜேஸனுக்கு.


நாற்புறமும் பார்வையை சுழலவிட்டு அக்கம பக்கத்தில் வேறு யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டுவிட்ட. ஜேஸன் சட்டென்று எதிரியின் மீது பாய்ந்தான்...
அஃ...!
திமிர் தாக்குதலால் தடுமாறிப் போய்விட்ட போதிலும் அந்த இத்தாலியன் சட்டென்று சுதாரித்துக்கொண்டு ஜேஸனை திருப்பித் தாக்கிறேன்.
ம்ப்ப் ..
இங்கிலீஷ்காரன!


அந்த உதையை வாங்கிக்கொண்டு அதே வேகத்தில் எதிரியின் காலைப்பற்றி முறுக்கினான் ஜேஸன்.
முதல் கட்டத்தில் வெற்றி சுலபமாக கிட்டப்பட்டுவிட்டது ஆனாலும் இன்னும் சமாளிக்க வேண்டியது நிறைய பாக்கியிருக்கிறது.
அடிபட்டுக்கிடந்த எதிரியை கட்டிப்போட்டு வாயில் துணியையும் திணித்துவிட்டு மேலே நடந்தான் ஜேஸன்.
இன்னும் நான்கு பேரை சமாளித்தாக வேண்டும்!
முதல் கூடாரத்தின் உள்ளேயிருந்து சன்னமான குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது
பன்றிகளின் கொட்டிலிலிருந்து இப்படித்தான் ஓசை வரும்.


ஓசையின்றி உள்ளே நுழைந்தான் ஜேஸன். ஆழ்ந்த நித்தி
ரையிலிருந்த ஆல்பர்ட்டோவின் வாய் அகல திறந்தே
இருந்தது—உள்ளே துணியை திணிப்பதற்கு வசதியாக!
ஹஹ் . ஹஹ் ..!


அவனை அப்படியே
கட்டிலோடு கட்டிப்
போட்டு விட்டு
அடுத்த கூடாரத்
தை நோக்கி நடந்
தான் ஜேஸன்.
அங்கே யாராவது விழித்
துக் கொண்டிருந்தால்
ஆபத்தாகிவிடும்-
எச்சரிக்கைதேவை !


இன்னமும் மூன்று பேர்களை சமாளிக்க வேண்டியிருந்தது கூடாரத்தை இழுத்துக் கட்டியிருந்த முளைகளை பிடுங்கினான் ஜேஸன்...!


இரண்டு மூன்று முளைகளை பிடுங்கி எடுத்ததும் கூடாரம் சட்டென்று சரிந்து விழுந்தது.
அவ்ர . !
யாயாயா...!


அந்த கான்வஸ் குவியலின் விளிம்பில் இருந்து எச்சரிக்கையோடு நின்று கொண்டிருந்தான் ஜேஸன்.
எ...என்ன நடந்தது...?
இதோ...!


ஆஆஆ...!


இன்னொரு இத்தாலியன் வெளியே வரமுடியாமல் திணறிக்கொண்டிருந் தான.. அவனைக் குறி வைத்து ஒரு போடு போட்டான் ஜேஸன்.
சுயவுணர்விழந்த இரண்டு ஆசாமிகளையும் அப்படியே சுருட்டிக் கட்டிப்போட்டான்.
இனி... இவர்கள் தொல்லை தர மாட்டார்கள்!


ஆனால் மறு கணம்
இங்கிலீஷ்காரன்... இவன் எப்படி இங்கே வந்து சேர்ந்தான்?
அம்மாடியோவ்... மயிரிழையில் தப்பித்துக் கொண்டேன்!
டுமீல்!


தான் கீழே வைத்திருந்த ரைபிளை எடுக்கப்பாய்ந்தான் ஜேஸன்.
அதிகம் தெரிந்து கொண்டு விட்டாய் தம்பி. உன்னை உயிரோடு விட்டு வைத்தால் தொல்லைகள் ஏராளமாக வரும்! எனவே-


சாமர்த்தியமாக உருண்டு தோட்டாக்களின் இலக்கிலிருந்து விலகிக்கொண்ட ஜேஸன் ரைபிளைக் கொண்டு எதிரியை சுடலானான்.
வயதான புரபஸரைப் போல என்னையும் நினைத்து விட்டாயா? திருப்பித்தாக்கத் தெரியும் எனக்கு.


கார்டன் ஓடத் தொடங்கினான்...
படகுக்குச் சென்று விட வேண்டும். தப்பிக்க வேறு உபாயம் இல்லை.


ஜேஸன் விடாமம் விரட்டிக் கொண்டு போனான்.
அத்தனை சுலபமாக தப்பியோட முடியாது கார்டன்!
குர்மி தீவில் நீண்ட நாட்கள் தங்கி இருந்தமையால் கார்டனுக்கு தீவிலுள்ள பாதைகளும் மேடு பள்ளங்களும் அத்துபடி...
ஊப்.. ப்ப்!


அவனை மட்டும் தீர்த்துக் கட்டி விட்டேனென்றால் புதையல் மொத்தமும் எனக்குச் சொந்தமாகிவிடும்!
பாறையிலிருந்து விலகி வேறு பாறையின் பின்னால் ஒளிந்து நின்று கொண்டான் கார்டன்.
அவன் என்னைத் தேடிக் கொண்டு இந்த வழியாகத் தான் வருவான்.. இம்முறை என்னுடைய குறி தப்பாது!
கீழே விழுந்த ஜேஸன் சுதாரித்துக் கொண்டு எழுந்தபோது கார்டனை எங்குமே காணாமல் திகைத்தான்.
அயோக்கிய ராஸ்கல்! எங்கே போய்த் தொலைந்தானோ- தெரியவில்லையே!


கார்டனைத்தேடி பார்வையை நாற்புறமும் நீளவிட்ட வாறு மெதுவாக அடிஎடுத்து வைத்து சென்று கொண்டிருந்த ஜேஸனை குறிவைத்து துப்பாக்கியை நீட்டினான் கார்டன்.
திடீரென்று அவனுடைய கண்களில் பீதியும் மிரட்சியும் மின்னலடித்தன.
ஆஆ...ஹாஹா!


தேள் தன் கொடுக்கை பயன்படுத்துவதற்குள்ளாகவே மரண பயத்தினால் தடுமாறி பின்னுக்குச்சரிந்த கார்டன் சுமார் ஐம்பது அடி கீழே போய் தலைக்குப்புற விழுந்தான்.
என்ன ஆச்சு . ?
ஐ...யோ!
குறிவைக்கப்பட்டவன் தப்பிவிட்டான்...அந்தோ- குறிவைத்துக்காத்து நின்றவன் பிணமாகிப்போனான்!
அவன் எனக்காகத்தான் அங்கே மறைவில் காத்துக்கொண்டிருந்திருக்கக்கூடும்–திடீரென்று அவனுக்கு என்ன ஆயிற்று என்று விளங்கவில்லையே!
பிரேத பரிசோதனை அறிக்கைதான் உண்மையை சரிவர வெளிப்படுத்தக்கூடும்-கார்டன் இறந்தது கருந்தேளின் கொடிய விஷத்தினாலா அல்லது கீழே விழுந்ததில் கழுத்து முறிந்து போனதாலா என்று...!


மறுநாள் அதிகாலை ஒரு விசைப்படகு தீவுக்கு வந்து சேர்ந்தது. ஜேஸனின் சந்தேகங்களை எமிலி இன்ஸ்பெக்டரிடம் விளக்கியிருந்தாள். தானே நேரில் சென்று ஆராய்ந்து விடுவது என்ற தீர்மானத்தோடு காவல்துறை அதிகாரி புறப்பட்டு வந்து விட்டார்..
ஹாய் ஜேஸன்! நீங்கள் பத்திரமாக இருப்பது எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா!
திரும்பிப் பார்த்த எமிலி நெஞ்சில் சட்டென்று கரைபுரண்டோடிய மகிழ்ச்சியால் திக்குமுக்காடிப் போனாள்...
அப்பா... ஓ... அப்பாவேதான்!


நீங்கள் உயிரோடுதான் இருப்பீர்கள் என்று எத்தனை உறுதியோடு நம்பிக் கொண்டிருந்தேன் தெரியுமா... நீங்கள் எங்கே இருந்தீர்கள்?
நான் இப்போது உயிரோடு இருக்கிறேன் என்றால் ஜேஸன்தான் காரணம்.
கார்டன் என்ன ஆனான்...?
இறந்து போய் விட்டான் இன்ஸ்பெக்டர்...! வாருங்கள் இடத்தை காட்டுகிறேன்.
மேற்கொண்டு காரியங்கள் மளமளவென்று நடந்தேறின. கார்டனின் சகாக்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களோடு கார்டனின் உடலும் காவல் துறையினரின் விசைப்படகில் ஏற்றப்பட்டது.
உங்களைப்போல் ஒரு நண்பன் கிடைக்க யாருமே கொடுத்து வைத்திருக்க வேண்டும் மிஸ்டர் ஜேஸன்! மிஸ்டர் டிங்கர் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிதான்..! அவரை விடுதலை செய்து உங்களோடு சேர்ந்துக் கொள்ள அனுப்பி வைக்கிறேன்.


அதே நாளில்-காவல்துறையினரின் இன்னொரு விசைப் படகில் டிங்கர் குர்மி தீவுக்கு வந்து சேர்ந்தான்...!
மீண்டும் இங்கே வந்து சேர்ந்ததில் பட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன் புரபஸர் ஸார்!
வா வா உனக்காகத்தான் வெகுநேரமாக இங்கே காத்து நிற்கிறோம் நாங்கள்!
வீண் சம்பிரதாயங்களில் நேரத்தை வீணடித்துக் கொண்டிராமல் காரியத்தில் இறங்கத் தீர்மானித்தார் புரபஸர்.
முன் ஜென்மத்தில் அப்பா அடிமைகளை வேலைவாங்கும் கங்காணியாக இருந்திருப்பாரோ என்னவோ!
வாருங்கள் போகலாம் ! அங்கே நிறைய வேலை பாக்கி இருக்கிறது நமக்கு!


அடை பட்டுக் கிடந்தபோது அவர் செய்த மொழிபெயர்ப்பில் கிடைத்த தகவல்கள் அவரது ஆர்வத்தை வெகுவாக தூண்டி விட்டிருந்தன.
இங்கே இப்படி ஒரு வேலையில் ஈடுபட வேண்டி வரும் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை ..!
பேசாமல் சிறையிலேயே இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது!
இறுதியில்-
ஹே.. இங்கே ஏதோ இருக்கிறது ...!
விலகிக்கொள்-என்ன என்று நான் பார்க்கிறேன்!


எச்சரிக்கையோடு தொடர்ந்து தோண்டியபோது கல்லால் ஆன இன்னொரு கதவு இருப்பது தெரியவந்தது.
கதவின் இடப்பக்கம் உள்ள தேள் உருவத்தைப்பற்றி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது, டிங்கர்- அழுத்திப்பார் அல்லது திருகிப்பார்.


டிங்கர் புரபஸர் சொன்ன படி முயற்சித்தபோது கதவு அகலத் திறந்து கொண்டது.
ஊய்ய்!
புரபஸர்-ஜாக்பாட் அடித்து விட்டீர்கள்!


மத்திய தரைக் கடல் பகுதியில் ஒவ்வொரு நாட்டிலும் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் கொள்ளையடிக்கப்பட்ட பொக்கிஷங்களின் ஒரு பகுதி அங்கே குவியலாகக்கிடந்தது.
தங்கப்பாளம்-ஒரு டன் இருக்கும்போல் இருக்கிறது.
இப்போது ஒத்துக்கொள்கி றீயா டிங்கர்-இவை எட்ருஸ்கான் காலத்தை சேர்ந்தவை என்று...!
மீண்டும் உங்களோடு விவாதத்தில் இறங்க எனக்கு தைரியமில்லை புரபஸர்...சென்றதடவை நான் விவாதம் செய்ததனால் ஏற்பட்ட விளைவுகளைத்தான் நீங்களும் நானும் அனுபவித்தோமே!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்:
S. விஜயன், முகவரி : லயன் காமிக்ஸ், த. பெ. 55,
சிவகாசி - 626 123. போன் : 1159. வெளியீடு எண் : 18.
அச்சிட்டோர் : முத்து ஃபைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ்,
சிவகாசி.


லயன் காமிக்ஸ்
தீபாவளி ஸ்பெஷல்!
பிரதிக்கு முந்துங்கள்!
டெக்ஸ் வில்லர் தோன்றும் ஜலவாங்கிக் குரங்கு!
மயிர்க்கூச்செறியவைக்கும் சித்திரக் கதை!
அடுத்த வெளியீடு!


ராமு & சோமு
நண்பன் கோபுவின் வீட்டில்.
கரும்புச் சாறு குடிக்க ஆசையாய் உள்ளது. ஆனால் அம்மா காசு கொடுக்க மாட்டார்களே!
சாப்பாடு வேளையில் கண்டதை சாபபிட அனுமதிக்க மாட்டார்கள்!
கேட்டுத் தான் பார்ப்போமே!
மம்மி!
என்ன விஷயம்?
மம்மி, கரும்புச் சாறு குடிக்கப் போகிறோம்! ஒரு ஐம்பது காசு தூக்கிப் போடேன்!


ஊஹூம் இப்பொழுதெல்லாம் கூடாது! மேலே வாருங்கள்!
ப்ளீஸ் மம்மி! இன்னைக்கு முழுவதும் கரும்பு ஜூஸ் குடிக்கவே இல்லை!
கரும்பு ஜூஸ் குடித்தால் ஜலதோஷம் பிடிக்கும்!
இல்லை மம்மி! ஒரு கிளாஸ் மட்டும் வாங்கி நாங்கள் பங்கு போட்டுக் கொள்கிறோம்!
கூடாது! கூடாது!
அடச் சே!
ம்ஹூம்!




# உங்கள் கடிதம்!

● கோ. விஜயகிருஷ்ணன், ஈரோடு-5.

ஸ்பைடருக்கு பிற்கால வாரிசாக குற்றவியல் புரிய மினி-ஸ்பைடரை நியமிக்கலாமே! மினிஸ்பைடர் வரும் ஒவ்வொரு இடமும் அற்புதம்

● V. சதீஸ்குமார், கோவை-1.

"யார் அந்த மினி ஸ்பைடர்" அருமை! இதில் ஸ்பைடர் தோன்றி எங்களுக்கு அமுதம் கொடுத்தாற்போல் சாகஸம் புரிந்து விட்டார். ஆனால் அந்த மினி ஸ்பைடரை குற்றவியல் சக்கரவர்த்திக்கு நிகராக தோன்ற செய்தது பெருங்குறை. வாழ்க - ஸ்பைடர் வளர்க - லயன் காமிக்ஸ்.

● P. இராஜவேல், பழனியாபுரி.

ஸ்பைடரின் கதைகள் என்றால் எனக்கு வெல்லக்கட்டி! கற்கண்டு! தேன்! காணாத புதையலைக் கண்டால் நம் உள்ளம் துள்ளுவதுபோல் ஸ்பைடரின் கதையில் என் உள்ளம் துள்ளும்.

● K. K. ஐயப்பன், கோவை-1.

தனக்கு ஆபத்து வேளையில்கூட எதிரியை மன்னிக்கும் குணம் உள்ள ஸ்பைடருக்கு நிகா ஸ்பைடர் தான். தொடரட்டும் ஸ்பைடரின் சாகஸங்கள்.

● எஸ். கோகுலகிருஷ்ணன், புதுவை-2.

''யார் அந்த மினி ஸ்பைடர்'' கதைக்கு வரையப்பட்ட ஓவியங்கள் அனைத்தும் உணர்ச்சி ஊட்டும் உயிர் சித்திரங்கள் ஆகும். அதில் ஸ்பைடர் நிகழ்த்தும் ஒவ்வொரு சாகஸமும் அபாரம்! அட்டகாசம்!!

● எம்.எஸ்.எஸ். அப்துல்காதர், நாகர்கோவில்-1.

ஸ்பைடர் சாகஸங்களில் ''யார் அந்த மினி ஸ்பைடர்'' மற்றுமொரு வைரக்கல்! நம்ம சிறுமூஞ்சி ஸ்பைடர்கூட அங்கங்கே ஜோக்கடிக்கிறாரே! ஸ்பைடரும், மினி ஸ்பைடரும் கூட்டுச்சேரும் இடம், தமிழ் சினிமாக்களின் வழக்கமான ''கிளைமாக்ஸை'' நினைவு படுத்தியது

● D. T. குபேந்திரன், சென்னை-12.

இன்னும் சில கதாநாயகர்களா? அடேயப்பா! லயன் காமிக்ஸா? அட்சய பாத்திரமா?

● ஜே. ஜெரால்டு முத்துராஜ், திண்டுக்கல்-3.

வழக்கமான பழி வாங்கல் கதைதான் என்றாலும் ''யார் அந்த மினி ஸ்பைடரில்'' நல்ல விறுவிறுப்பு. வளர்பிறை போல் வளர்ந்துவரும் லயன் காமிக்ஸ்க்கு எனது பாராட்டுகள்!

● P பாலசுப்பிரமணியன், கரூர்-1.

கபிஷ், சுட்டிப்பயல், கிச்சு-கிச்சு, ஜோக்கர் வால்ட் டிஸ்னியின் டொனால்டு வாத்து, மூளைக்கு வேலை, புதுமையான வர்ணம் தீட்டும் பகுதி, சித்திரச் சிரிப்பு, புள்ளிகளை இணையுங்கள், வித்தியாசங்கள் எத்தனை? அடேயப்பா...வெறும் 50 காசு மட்டுமே அதிகமாக வாங்கினீர்கள், அதற்கு ஈடாக இவ்வளவு அதிகப் பகுதிகளா!

● N. சாந்திநிகேதன், திருமங்கலம்.

கடைசியில் மினி ஸ்பைடரும், அசல் ஸ்பைடரும் சேரும் கட்டமானது எனது நெஞ்சைக் கவர்ந்தது.

● G. V. ராஜலிங்கம், மெட்ராத்தி.

கடையில் எண்ணற்ற கதைகள் குப்பை போல் உள்ளன. அந்தக் குப்பையில் **லயன் காமிக்ஸ்** மட்டும் குண்டு மணியாக பிரகாசிக்கிறது.


விரைவில் வருகிறார்!
வால்ட் டிஸ்னியின்
ஈகிள் மேன்
லயன் காமிக்ஸின்
மற்றும் ஒரு புதுமை அறிமுகம்!!!


திரைப்படமாய் வந்த
அற்புதக் கதை!
LION COMICS
படிக்கத் தவறாதீர்கள்!



விரைவில்.......
இரட்டை
வேட்டையர்கள்
அதுதான் ஜார்ஜ் & டிரேக் இரட்டையர்களின் சங்கேதப் பெயர்! S16 உளவு ஸ்தாபனத்தின் தலையாய ஏஜெண்டுகளான இவர்கள் போகும் இடமெல்லாம், சந்திப்பது ஆபத்தையும், மரணத்தையும் தான்! தொழில் முறை ஸ்டண்ட் நடிகர்களான இவ்விருவரும் நிஜ வாழ்க்கையில் சந்திக்கும் அபாயங்கள் கணக்கிலடங்கா...! சட்டத்தையும், நீதியையும் பாதுகாக்கப் போரிடும் இந்த "வேட்டையர்களின்" துடிதுடிப்பு உங்களை நிச்சயம் கவரும்!...
லயன் காமிக்ஸ்
லயன் காமிக்ஸின் அறிமுக வரிசையில் மேலும் இரண்டு வீரர்கள்!

# வருகிறார்கள்...!




**சாகஸம் என்றால் லயன் காமிக்ஸ்**
**லயன் காமிக்ஸ் என்றால் சாகஸம்!**

# சுட்டிப்பயல்!




வலிமை தரும்
உடற்பயிற்சிகள்
வலிமை தரும்
உடற்பயிற்சிகள்



உடற்பயிற்சிகள்